**Chapter - 7 .1.1**

**Speech for 09-October-2021**

இந்த அத்தியாயத்தை சில கட்டுரைகளில் அகந்தையும் இரட்டை நிலையும் என்றும், பரம்பொருளில் , அகந்தை - இன்ப துன்பம் என்றும் குறிப்பிடுகிறார் கர்மயோகி அவர்கள். இந்த அத்தியாயத்தின் இரண்டு கருத்து - விரும்பி ஏற்ற அஞ்ஞானத்தால் ஜீவியம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வதே அகந்தை, இருமைகள், சுயநலமான ஜீவியத்தின் படைப்புகள் என்னும் இரண்டு theme களை இன்று எடுத்துக் கொள்கிறேன்.

முதலில் அகந்தை எப்படி வந்தது, ஏன் வந்தது என்பதை சுருக்கமாகப் பார்ப்போம் .

நாம் பொதுவாக அகந்தை என்றாலே, மனப்பான்மையை வைத்து, தற்பெருமை, தலைக்கனம், ஆடம்பரம், மதியாமை, அந்தஸ்து வெளிப்படுவது. செல்வாக்கு வெளிப்படுவது, திமிர், பாராமுகம் போன்றவற்றை அடிப்படையாக கொண்ட அகங்கார மனப்பான்மையை வைத்து, அவை வெளிப்படும் விதங்களை வைத்து, அகந்தையை முடிவு செய்கிறோம். ஆனால் அகந்தை என்பதின் விளக்கமாக நான் புரிந்துக் கொள்வதை இப்போது சொல்கிறேன்.

பிரம்மம் - சிருஷ்டியில் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதை பரிணாமம் என்று புரிய பிரம்மம் எப்படி முதலில் உள்ளே மூழ்கியது என்று தெரிய வேண்டும். எல்லாமுமாக எங்கும் நிறைந்த பிரம்மம் என்னும் போது அது தன்னை எங்கே மறைத்துக் கொள்ள முடியும். அது தனக்குள், தன்னைத் தானே மறைத்துக் கொள்கிறது. என்றாலும், அதாவது தன்னை மறைத்தாலும் தன்னை பற்றிய நினைவு, ஞானம் அதற்கு இருப்பதால் - ever present - ஆக இருப்பதால், அது தன்னை மறக்க வேண்டி இருக்கிறது. அது காலம் என்ற ஒன்றை உருவாக்குகிறது. அதுனுள் நுழைந்து கடந்த காலத்திலும் எதிர்காலத்திலும் வாழ்ந்து நிகழ்காலத்தை துறக்கிறது. கடந்த காலத்தில் வாழ, அதன் அனுபவங்களை அசை போட , அதை வைத்து எதிர்காலத்தின் எதிர்பார்ப்பை திட்டமிட, அப்படி நடப்பதே ஆனந்தம் என்று நினைக்க, அதற்கு ஒரு கருவி தேவைப் படுகிறது-அது அகந்தை. நாம் நிகழ்காலத்தை நினைக்காமல், ஒவ்வொன்றையும் கடந்த காலத்தை வைத்தே எதிர்காலத்தை முடிவு செய்ய, அதன் அபிப்ராயங்கள், முன் முடிவுகள், சுகத் தேர்வுகள், விருப்பு, வெறுப்புகள் என்று இருப்பதைப்

பார்த்தால் இது புரியும். அதற்கு பிரித்துப் பார்க்க, ஒரே நேரத்தில் ஒன்றை மட்டுமே பார்க்க ஒரு தளம் தேவைப்படுகிறது. அதுவே மனம், மொத்த அறியாமை வெளிப்படும் இடமாக மேல் மனம் இருக்கிறது. அது, தான் பிரம்மம் என்று உணர வேண்டுமென்றால், நான் ஒளி மிக்கவன், அதை இருளை உருவாக்க உபயோகப்படுத்தி கொண்டு இருக்கிறேன் என்று புரிந்தால், மீண்டும் வந்த வழியே மேல் மனதிலிருந்து ஆழ் மனத்திற்குச் சென்று, பிரித்து பார்த்த பிரிவினையில் ஒருமையைப் பார்த்து காலத்திற்குள்ளும் , எந்த விதமான பிரிவினைக்குள்ளும், செல்லாமல் இருந்தால் தான் நாம் இறை வாழ்வை, ஆனந்தமயமான வாழ்வை வாழ முடியும்.

இந்த விளக்கத்தை இன்றைய கருத்தில் பொருத்திப் பார்க்கும் போது நம்மை வரையறைக்குள் வைப்பது, நம்மை பரிணாமத்தில் முன்னேற விடாமல் இருப்பது, நம் விருப்பு, வெறுப்பு, சுக தேவைகள் என்று நம்மை இருக்க வைக்கும், நம் முன் முடிவுகள், அபிப்ராயங்கள் அனைத்தும் அகந்தையே என்று எடுத்துக் கொள்ளலாம்.

வாழ்வில் எல்லாம் அனந்தம் என்றால் ஏன் பிரிவு, வேற்றுமை, மரணம், தோல்வி, பயம், துன்பம் ஏற்படுகிறது என்ற கேள்வி எழுகிறது. இவையெல்லாம் அதன் எதிர்பதத்திற்கான பகுதி. ஒருங்கிணைந்த holistic ஞானத்தை இழந்ததால் இது ஏற்படுகிறது. பெரும்பாலான நேரத்தில் சரியான இடத்தில் தவறானதையும், தவறான இடத்தில் சரியானதையும் பொருத்திப் பார்த்து நாம் வாழ்வை, நிகழ்வுகளை புரிந்துக் கொள்ள முயல்கிறோம். அதனால் நமக்கு பிடிக்காதது, எதிர்பார்க்காதது நடக்கும் போது அது துன்பமாக, தோல்வியாகத் தெரிகிறது. அந்த முழுமையான ஞானத்தை பெற முடியவில்லை என்றாலும், ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றாலும் குறைந்த பட்சம், துன்பம் ஏற்படுத்திய மனிதர்கள், சூழல் ஆகியவற்றில் தன் பங்கு, மற்றும் ஒருமை, ஒற்றுமை, பொதுத் தன்மை unity (or ) oneness (or ) commonality -ஐ எடுத்துக் கொண்டு பார்த்தால், நம் அகந்தை தான் அதற்கு காரணம் என்பது புரியும்.

ஒளியை ஏதோ ஒன்று தடுப்பதுதான் நமக்கு நிழலாகத் தெரிகிறது, இருளாகத் தெரிகிறது.. அது போல ஞானத்தைத் தடுக்கும் அகந்தையின் பரிமாணங்கள் வாழ்வில் துன்பம் என்னும் நிழலாக, இருளாகத் தெரிகிறது ஒவ்வொன்றையும் பிரிவினை என்ற பார்வையில் பார்த்து, நல்லது, கெட்டது , தேவை, தேவையில்லை, விருப்பு, வெறுப்பு என்று பிரிவினை செய்து பார்த்தே எதையும் புரிந்துக் கொள்கிறோம். அந்தப் பிரிவினை மனப்பான்மையை,

அழிக்க வேண்டுமென்றால் நாம் அதிமன நிலையை , supermind -க்குரிய மனப்பான்மையை அடைய வேண்டும் . இதற்கு மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையே உள்ள பிரிவினையை  குறைக்க வேண்டும். அல்லது தொடர்பை வலுப்படுத்த வேண்டும் . இதை நாம் இன்று உயர்ந்ததாக நினைக்கும் - மனித நோக்கில், மனசாட்சி நோக்கில், சமுதாய நோக்கில் உயர்வாக நினைப்பவை கூட உயர்வானவை அல்ல.  இவை அனைத்திலும் கூட உணர்வுகள், அதன் மையங்கள் மட்டுமே செயல்படுகிறது. அதிலிருந்து வேறு மையங்களுக்கு உயர்வது, அதாவது supermind நிலைகளும்  நம்முள் உள்ளது என்று புரிந்து அதற்கு மாறுவது அந்த உயர்ந்த நிலையில் நின்று செயல்படுவது  இத்தகைய பிரிவினைகளை, அகந்தையைக் குறைக்கும்.

வேதனை, தோல்வி என்பவை ஆனந்தத்தின் நிழல். சுயநலம், குறுகிய மனப்பான்மை, தாழ்ந்த மனப்பான்மை, ஆனந்தத்தின் நிழல் என்றோ அல்லது தீமை என்பது நன்மையின் நிழல் என்றோ நமக்குப் புரியும். அதற்குத் தேவையான அறிவைப் பெறுவது மனிதனின் முதல் வேலை.

இன்று அன்னையிடம் வந்த பிறகு நமக்கு உயர்ந்த மனப்பான்மை என்றால் என்னவென்று ஒரு அளவிற்காவது தெரிந்திருக்கிறது.  உணர்வின் நிலை, மனதின்  நிலை, உயர்ந்து இருக்கிறது.  அது உயர்ந்த பிறகு அதை வெளிப்படுத்தும் அறிவு, திறன் ஆகியவற்றை நாம் பெறவில்லை என்றால் அது வாழ்வில், வாழும் முறைகளில், அதன் சட்டங்களில் பெரும் குழப்பத்தை உருவாக்கும்.  அன்றாட வாழ்வில் நாம் சாதாரண மனிதன் போன்றும் இல்லாமல், அன்னை அன்பர்கள் போலவும் இல்லாமல் ஒரு இயல்பான வாழ்வை வாழ முடியாமல் போய்விடும்.  நம் நம்பிக்கைகள், நம் வரையறைகள், வாழ்க்கையை குலைக்கும்படி , ஆனந்தத்தை குலைக்கும்படி இருக்கக் கூடாது.  நம்மில் பெரும்பாலானோரின் மனநிலை, வாழ்வைப் பார்த்தால் இது புரியும். மைய்ய தலைமைகள், ஸ்தாபன முக்கியஸ்தர்கள் அரைகுறையாக தெரிந்துக்  சொல்வதை ஆராய்ந்துப் பார்க்காமல், அப்படி சொல்லப்பட்டு இருக்கிறதா, எங்கே சொல்லப்பட்டு இருக்கிறது என்று தெரிந்துக் கொள்ளாமல் ஏற்றுக் கொள்வதால் வந்த அஞ்ஞானம் தந்த குழப்பம் அது.

தனி மனிதனுக்கு செய்வதை அன்னைக்குச் செய்வதாக நினைக்கும் முட்டாள்தனம் இது. அஞ்ஞானத்தின் அடிப்படையில் அமைந்த இந்த அடிமைத்தனம் அகந்தையின் உச்சம்.  சொல்வதை  அவர்கள் செய்கிறார்களா என்று பார்க்கும்  குறைந்த பட்ச அறிவு கூட நமக்கு இருப்பதில்லை. குறைந்த சப்தத்துடன் பேச வேண்டும் என்பவர் குரல்

சாதாரணமாகவே எட்டு தெருவுக்கு கேட்கும். சேவை அன்பர்களை திட்டினால் எட்டு ஊருக்கு கேட்கும். ஆனால் அதை கவனிக்கும் உணர்வு நமக்கு இருப்பதில்லை. ஊருக்கெல்லாம் சேவையின் பெருமையைப் பற்றி சொல்பவர், சேவைக்கு வரச் சொல்பவர், தன் வீட்டு உறுப்பினர்களை சேவைக்கு வரச் சொன்னதேயில்லை என்பதை கூட கவனிப்பதில்லை. உடல் உழைப்பு அன்னைச் சேவை என்று சொல்பவர் ஒரு துரும்பையும் நகர்த்தாதவர் என்பதை கவனிப்பதில்லை. பிறருக்கு முதலில் வர வேண்டும் என்று சொல்பவர்களில், தனக்கென கேட்டு பெறுபவர்களே அதிகம். அவர்களின் அரைகுறை சட்டங்கள், அறிவுரைகளைக் கேட்டு குடும்பத்தில் நிம்மதி இழந்தவர் பலர். விவாகரத்து வரை சென்றவரும் உண்டு. இவையெல்லாம் அறிவுக்கும், உணர்வுக்கும் தொடர்பு இல்லாததால் வாழ்வில் வெளிப்படும் குழப்பங்கள் -நமக்கு துன்பம், தீமை, தோல்வியாகத் தெரிகிறது. அன்னை மேல் அன்பு, பக்தியை விட பயமும், சட்டங்களை பற்றிய குழப்பமும் இருப்பது அதன் அடையாளம். வாழ்வு என்பது மனிதனின் அனைத்து நிலைகளும் - parts of being ஒருங்கிணைத்த சுமுகமான வெளிப்பாடாக இருக்க வேண்டும். அதற்கு இறைவன் நோக்கம் நமக்குப் புரிய வேண்டும். பரிணாம முன்னேற்றம் என்றால் என்ன என்று புரிய வேண்டும்.

ஆனால் மனிதன் தன் நோக்கத்திற்காக அதை நிறைவேற்றுவதற்காக இறைவன் இருப்பதாக நினைக்கிறான். அதாவது நம் அகந்தையை, அதன் தேவைகளை ஒட்டித் தான் இறைவன் இருப்பதாக நினைக்கிறோம். ஆனால் உண்மையில் அவன் நோக்கம் தான் வாழ்வில் வெளிப்பட்டுக் கொண்டு இருக்கிறது. அவனை மையமாக வைத்துத்தான் நாம் சுற்றிக் கொண்டு இருக்கிறோம் என்பதை நாம் கவனிப்பதில்லை. உண்மையில் நாமே இறைவன் என்பதை நாம் உணர்ந்ததே இல்லை. குரங்கிடம் நீ மனிதனாவாய் என்று சொன்னால் நம்பியிருக்குமா? அது போல நாம் இருக்கிறோம் என்கிறார் பகவான்.

மனம் சிறப்பு பெற்று ஆத்மா எழுகிறது என்று மரபு கூறுகிறது. அதை மனதை,உணர்வை அடக்குவதன் மூலம் பெற நினைக்கிறோம். அது தவறு. நமக்கு உரியது அல்ல. நம் அடிப்படை திருவுருமாற்றம். முதலில் அஞ்ஞானத்தில் இருந்து ஞானம் எழ வேண்டும். பின் ஞானம் ஆன்மாவை எழுப்ப வேண்டும். அதனால் நாம் புலன்களை புறக்கணிக்கக் கூடாது, அறிவை, பகுத்தறிவை புறக்கணிக்கக் கூடாது. மனதை அடக்கினால் அகந்தை அதிகமாகும். பல புராண, இதிகாசங்கள் மூலம் இது தெரிகிறது. வாழ்வில் அனுபவம் பெற்று ஒவ்வொரு அஞ்ஞானத்திற்கு பின்னும்

அகந்தையின் செயல் இருக்கிறது என்று புரிய வேண்டும். அந்த அனுபவம் தரும் ஞானம், பரிணாமம். பிறகு தான் அதன் பின் உள்ள சத்தியம் புரியும். ego cannot judge God, God centre in us should judge ego . நாம் நம் கண்ணோட்டத்தில் பிரபஞ்சத்தைக் காண்கிறோம். பிரபஞ்சத்தின் கண்ணோட்டத்தில் நம்மைக் காண வேண்டும். பூத்துக் குலுங்கும் நேரத்தில் பூங்காக்களுக்கு , பூச்செடிகளுக்கு பாதுகாப்பு அதிகம் தேவை. பழம் தரும் நேரத்தில் பாதுகாப்பு அதிகம் தேவை. அப்போது நாம் போடும் ஆட்கள், சட்டங்கள் துன்பமாகத் தெரியும். அது போல பரிணாமத்தில் நாம் முன்னேற வேண்டிய நேரம் வரும் போது, அதற்கான ஞானம், திறமை, திறன் பெரும் நேரம் வரும் போது ஆன்மா செய்யும் செயல்கள், நமக்குத் தீமையாகத் துன்பமாகத் தெரிகிறது. இது வறண்ட தத்துவமில்லை , பகுத்தறிவு உள்ளவர் அல்லது குறைந்த பட்ச விழிப்பைப் பெற்றவர் காணும் உண்மை.

2008-இல், company ஆரம்பித்த நான் 2012 வரை அன்னை விரும்பும் பண்புகளை, கர்மயோகி அவர்கள் சொன்ன பல முறைகளை பின்பற்றி நடத்தினேன். 2012-க்கு பிறகு அந்த வளர்ச்சியை நிலைப் படுத்த அடுத்த நிலை பண்புகளை எடுக்க முடியவில்லை. குறைந்த பட்சம் அது வரை பின்பற்றிய பண்புகளைக் கூட பின்பற்ற முடியவில்லை. சொன்ன சொல் தவறாமை, என்னை நம்பி எத்தனை பேர் குடும்பம், வாழ்க்கை இருக்கிறது, தொடர்ந்து வளர்ச்சியைக் காட்ட வேண்டிய கட்டாயம், அது வருமானம் மட்டுமே என்று, தவறான எண்ணம் - எல்லாம் சேர்ந்து என்னை பின்னே இழுத்தது. இது எனக்குத் தெரியாமலேயே நடந்தது.

2015 - December வெள்ளம் ஆன்மா செய்த காரியம். என் பரிணாம பூந்தோட்டம் அழியாமல் இருக்க ஆன்மா போட்ட பாதுகாப்பு. தடம் மாறி சென்ற என்னை மீண்டும் அன்னை வழிக்கு வரவைக்க செய்த காரியம், உண்மையான ஆனந்தம் எங்கே இருக்கிறது என்பதை எனக்கு புரிய வைக்க நடந்தது அது. அன்று அது துன்பமாக, அன்னை என்னை கைவிட்டுவிட்டார்கள் என்னும் நிலையில் இருந்தது. அது அகந்தையின் பார்வை. என் அகந்தை, அன்னையை எடை போட்ட விதம் அது. ஆனால் ஒரு வருடம் கழித்து ஒரு integral பார்வையில் அதன் பொருள் முழுவதுமாக புரிந்த போது அது தந்த ஆனந்தம் அலாதியானது. வாழ்வின் சட்டங்களை, புலன்கள் உணர்வுகள், உணர்ச்சிகள் மூலம் ஆன்மா உணர்த்துகிறது. துரோகம், ஏமாற்றம், தோல்வி, அல்லது அதற்கு எதிரான வெற்றி, சந்தோஷம் , முன்னேற்றம் ஆகியயவை இன்பம் - துன்பம் என்னும் நிலைகளை உணர்த்துகின்றன. அதை நாம் கவனித்து வாழ்வு என்ன சொல்ல வருகிறது, அதை புரிந்துக் கொள்ளாமல் அகந்தை எந்த அளவிற்குத் தடுக்கிறது

என்பதைக் கவனித்தாலே நாம் துன்பம், என்று நினைப்பவை நம்மைத் தொட முடியாது.

பொதுவாக நாம் நமக்கு ஒன்று புரியவில்லை என்றால், விட்டு விடுவோம். தெரியவில்லை என்றால் குழப்பம் வரும் விட்டு விடுவோம். நாமிருக்கும் நிலைக்கு அடுத்த நிலை பற்றி சிந்திக்கவும் மாட்டோம். எதையும் நமக்குத் தெரிந்தது, தெரியாதது, புரிந்தது, புரியாதது என்று பிரித்துப் பார்ப்பது அகந்தையின் முதல் நிலை. தெரிந்ததை, புரிந்தது மட்டுமே செய்வது அகந்தையை திருப்திப்படுகிறது அதிலும் அனுபவம் அறிவைத் தந்து இருந்தாலும், எந்த ஒரு தருணத்திலும் அதன் கீழ் நிலையான உணர்வே ஒரு செயலை முடிவு செய்கிறது. அவை திடமான முன் முடிவாக, அபிப்ராயங்களாக மாறி துன்பத்திற்கு அடிப்படையாக அமைகிறது. It changes to rigid opinions and prejudices to give problems in life..

பதினாறு ஆண்டுகளுக்கு முன் என் மேல் சில வழக்குகள் தொடுக்கப்பட்டது. அதிலிருந்து வெளியே வர என்ன திட்டம் போட்டாலும் எதிரணியின் வழக்குறைஞர் அதை உடைத்து விடுவார். அவர் அறிவார்ந்தவர் என்று நம்பினேன். சில நேரம், நான் தனிப்பட்ட முறையில் பேசியதைக் கூட பேசுவார். என் வழக்குறைஞர் எதிரணிகளுக்கு விலை போய்விட்டாரோ என்று கூட நினைத்தேன். கிட்டத்தட்ட அனைத்து வழக்குகளிலும் தோல்வி அடைவேன், கூடிய விரைவில் கைது செய்யப்படுவேன் என்பதே நிலை.

அன்னையிடம் வந்த புதிது. சட்டங்கள் அதிகம் தெரியாது என்றாலும் வாழ்வில் பட்ட அடிகள் குறைந்த பட்ச உஷார் தனத்தை தந்திருந்தது. அன்னையிடம் பிரார்த்தித்தேன். பிரார்த்தனை செய்து வெளியே வரும் போது பிரபு என்ற பெயரிடப்பட்ட வாகனம் குறுக்கேச் சென்றது. அப்படி ஒரு நண்பர், மிகவும் நம்பிக்கையானவர், எனக்கு இருந்தார். அதனால் அது பற்றி பெரிதாக நினைக்கவில்லை. அங்கிருந்து வாகனம் ஒட்டிக் கொண்டு வரும் வரை இதே பிரார்த்தனை மனதில் ஓடிக் கொண்டு இருந்தது. ஒவ்வொரு முறையும் பிரபு என்ற எழுதப்பட்ட அந்த வாகனமோ அல்லது பிரபு என்று எழுதப்பட்ட வேறு வாகனமோ என் முன் சென்றது. அது தற்செயலாகப் படவில்லை. பிரபு தான் முதுகில் குத்துகிறாரோ என்று தோன்றியது. என்னால் அதை ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. அந்த அளவுக்கு நம்பிக்கையானவர் அவர். என்றாலும் அடுத்த முறை வழக்கு நீதிமன்றத்திற்கு வரும்முன் , திட்டமிடலின் போது, அவர் இருக்கும் போது வேறு மாதிரியும், வழக்குறைஞரிடம் வேறு மாதிரியும் கூறினேன். வேறு

ஆதாரங்களை தந்தேன்.  இந்த முறை வழக்கு எனக்கு சாதகமாக தீர்ப்பானது. இதில் மட்டுமல்ல  அனைத்து வழக்குகளிலிருந்தும் விடுபட்டேன்.

என்னுடைய - ஒருவர் மீதான முன் முடிவு, அபிப்ராயம், ஒன்றரை வருடம் போராட்டமாக இருந்தது அப்போது எனக்குப் புரிந்தது.  வாழ்வு இதை பலமுறை சுட்டிக் காட்டியும், அவர் மேல் உள்ள முட்டாள்தனமான நம்பிக்கையால் அதை கவனிக்கவே இல்லை. அதே போல எட்டு வருடங்களுக்கு முன் ஒரு அடுக்கு மாடி வீடுகள் காட்டுபவர் எனக்கு 20 லட்சம் தர வேண்டியிருந்தது. அவரால் அதை அப்போது தர முடியவில்லை. அதற்கு பதிலாக ஒரு flat -ஐ எடுத்துக் கொள்ளச் சொன்னார்.  இன்றைய பெரும்பாக்கம் அன்று பொட்டல் காடாக இருந்தது.  கண்ணுக்கு எட்டிய தூரம் வரை வேறு வீடுகளும் இல்லை, ஏரித் தண்ணீரே இருந்தது.  இந்த இடமெல்லாம் என்று முன்னேறப்போகிறது என்று நினைத்து, அந்த flat வேண்டாம், சிறிது சிறிதாக பணத்தை கொடுங்கள் என்றேன்.  இரண்டு மூன்று வருடங்களில் அதை சிறிது சிறுதாக அதை கொடுத்து எந்த உபயோகமும் இல்லாமல் செலவழிந்து விட்டது. இன்று அந்த flat ஒரு  கோடி என்று அறிந்தேன். இது போல வாழ்க்கைத் தரும் எந்த சந்தர்ப்பத்தையும் தொலை நோக்கில் எதையும் முழுமையாக பார்க்காமல், பார்க்கும் நிதானமில்லாமல், என் முன் முடிவுகள், என் வரையறையாக என் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்திருக்கிறது. இந்த கட்டுரையின் ஆரம்பத்தில் சொன்ன நம் சுயநலமும், வரையறையுமே நம் அகந்தை என்று இந்த நிகழ்வுகள் மூலம் புரிந்துக் கொண்டேன்.

முன் முடிவுகள், அபிப்ராயங்கள், அடிப்படையில் - அதாவது ஒரு காரணத்தை முடிவு செய்து விட்டு, அதை ஒட்டிய காரணிகளைத் தேடி ஒரு செயலை நியாயப்படுத்துவதே நம் வழக்கம். அதுவே அகந்தை.  அந்த பிரிவினையை, பிரித்துப் பார்க்கும் மனநிலையை, உடனே மாற்ற முடியாது.  எதையும் இன்பம், துன்பம் என்று பிரித்துப் பார்க்கும் அந்த மனதை - அகந்தையை, அதன் போக்கில் விட்டு அதை முன்னேற்றத்திற்கு, பிரபஞ்ச நோக்கத்திற்கு சேவை செய்ய வைப்பது, பழைய அல்லது தாழ்ந்த புலன்களை, உணர்வுகளை - உயர்ந்ததில் இருந்து பிரித்துப் பார்த்து, பழைய நிலைகளை புதிய ஞானத்தால் பரிணாமத்தில் முன்னேற வைப்பது என்று முயலவேண்டும்.  அது அகந்தையின் பிரித்துப் பார்க்கும் தன்மையை நம் முன்னேற்றத்திற்கு உபயோகப் படுத்துவது.

இன்று நாம் வாழ்வில் முழுதுமாக இருக்கிறோம். அதன் சட்டப்படி செயல்படுகிறோம். ஆனால் அது அகந்தை ஏற்படுத்திய சட்டம். துரோகம், ஏமாற்றம், தோல்வி, வெற்றி, இன்பம் , துன்பம் என்று நம் அபிப்ராயங்களின் அடிப்படையில் பார்த்து சுயநலமான நம் சந்தோஷத்திற்கு, எதிர்பார்ப்புக்கு எது சரியாக வருகிறதோ அதை எடுத்துக் கொள்கிறோம். அது அகந்தையின் சட்டம். அதாவது, எப்போதும் அகந்தையின் சட்டப்படியே செயல்படுகிறோம். இருந்தாலும் குறைந்த பட்சம் அதிலுள்ள தாழ்ந்த மனப்பான்மை புரிந்து - உயர்ந்ததை பிரித்துப் பார்ப்பது முதல் வகையான பரிணாம முன்னேற்றம்.

அப்படி இல்லாமல் எல்லாம் இறைவனே எல்லாம் அவன் செயலே என்னும் அகந்தை இல்லா மனப்பான்மையை ஆரம்பத்திலேயே எடுத்துக் கொண்டால், மனம் வளராமல் அறிவு மட்டும் ஒன்றை ஏதோ ஒரு காரணத்திற்காக ஏற்றுக் கொண்டால், வாழ்வின் அஸ்திவாரம் ஆட்டம் கண்டு விடும். இதற்கு உதாரணமாக உடலில் ஏதோ ஒரு பகுதி மட்டும் வளர்ந்தால், அது வளர்ச்சி அல்ல, நோயே. வளர்ச்சி என்பது உடலின் அனைத்து பகுதியும் ஒன்றிணைந்து ஒன்றுக்கொன்று ஒத்தாசையுடன் (complementary) வளர்வது என்று கர்மயோகி அவர்கள் கூறுகிறார். அடுத்த நிலையே முக்கியம் என்பது பற்றிய விளக்கத்தை சென்ற கூடலில் கொடுத்திருந்தேன். இதன் அடிப்படை என்னவென்றால் இறைவனுடன் அல்லது இறைத்தன்மையுடன் ஒரு உறவை படிப்படியாக ஏற்படுத்துவது.

இதை வாழ்வில் உறவுகளில் பார்க்கிறேன். நம்முடைய வாழ்வில் முக்கியமான உறவு என்று ஒன்றிரண்டே இருக்கும். மனைவியாக இருக்கலாம், நண்பராக இருக்கலாம், வேலையாக இருக்கலாம். மனைவியுடனான அல்லது கணவனுடனான உறவு இன்று சற்று கெட்டு விட்டால், சுமுகம் குறைந்தால், நாள் முழுவதும் எல்லோரிடமும் அது எதிரொலிக்கும். அதே போல நம் உற்ற நண்பரிடம் ஏற்படும் பிரச்சனை பல இடங்களில் எரிச்சலாக, சண்டையாக, சோகமாக, depression -ஆக எதிரொலிக்கும். வேலை சரியாக செய்ய முடியவில்லை என்றால், அல்லது colleague , Boss -உடன் பிரச்சனை என்றால், அது எல்லா இடங்களிலும் எதிரொலிக்கும். குறிப்பாக வீட்டில் உள்ளவர்களிடம், குழந்தைகளிடம் கூட எதிரொலிக்கும். இந்த சிலரிடமாவது அகந்தையிலிருந்து வெளியே வந்து சற்றே எதிர்பார்ப்பில்லாமல், சுயநலமில்லாமல் செயல்படுவது - வாழ்வில் பல இடங்களில் முரண்பாடுகள் வெளிப்படுதைக் குறைக்கும் . இந்த முக்கியமான இடங்களில் உயர் பண்பை பிரித்தறிந்து அதை எடுத்துக் கொண்டு, இறைத்தன்மையை, நிதானம், அல்லது சுமுகத்தை கொண்டு

வந்தால் முரண்பாடுகள் வெளிப்படுவது குறையும்.  அந்த அளவிற்கு நாம் அகந்தையிலிருந்து வெளியே வருகிறோம்.

வாழ்வில் சுமுகத்தின் allignment-ட்டே  இப்படியென்றால், கர்மயோகி, அன்னை அகியோருக்காக நாம் எடுக்கும் alignment முயற்சிகள் எப்படி இருக்கும். இதை அகந்தையின் பிரித்துப் பார்க்கும் தன்மையை நம் பரிணாம முன்னேற்றத்திற்கு உபயோகப் படுத்துவது எனலாம்.  சரியான ஞானம், பண்பு, உறவு பூரணத்தை தருகிறது என்பது சட்டம். அது பரிணாமத்தில் முன்னேற்றம்.  அது அகந்தை ஆன்மாவிற்கு அடங்குவது. அதுவே அன்னை நோக்கம் என்பதால் அதை ஏற்றுக் கொள்ள உணர்வு, அறிவு, உடல் தயாராகி விடும்.  அங்கு இன்பம், துன்பம், வெற்றி, தோல்வி என்பது இல்லை. முதல் நிலையில் சமத்துவமாகவும், இறுதியில் ஆனந்தமாகவும் மாறுகிறது. தத்துவம் புரிந்து நடைமுறைக்கு வரும் போது பகுத்தறியும் நிலையைத் தூண்டுவதே அகந்தையின் வேலையாக நாம் மாற்ற வேண்டும்.  உதாரணமாக துன்பம் வந்தால், அது இயற்கை, அதை தவிர்க்க முடியாது என்று மனம் திட்டவட்டமாக கூறுகிறது.  ஆனால் துன்பத்தை மறுப்பது நம் பிறப்புரிமை என்கிறார் பகவான்.  அதற்கு  வழி நாம் பிரித்தாறாயும் முறையை மாற்றுவது.  சத்தியத்தின் பார்வையை பகுத்து அறிவது. இத்தகைய பகுத்தறிவுக்கு மிகுந்த முக்கியத்துவம் தருகிறார் பகவான். இதை விவேகம், பாகுபாடு என்று பல வகைகளில் கர்மயோகி அவர்கள் எழுதியிருக்கிறார்கள். துன்பத்தை ஒரு நிகழ்வாக, பலனாக நினைப்பவன் திறனற்றவனாகிறான்.  ஆனால் துன்பத்தின் அடிப்படையை, அது வந்த காரணத்தை சிந்திப்பவன் பெறும் ஞானம் திறன் தரும்.  அது ஆனந்தத்திற்கான வெற்றிக்கான திறன்.

நாம் குறைந்த பட்சம் இந்த நிலையிலிருந்து அடுத்த கட்ட நிலையைக் கூட பிரித்து அறிவதில்லை.  புரியாததை புரிந்துக் கொள்ள முயல்வதில்லை. அடுத்த கட்ட திறமையை பெற முயல்வதில்லை. இருப்பதைக் கொண்டு சுகம் பெற நினைக்கிறோம். நம் வரையறைக்குள் பெறுவதே போதும் என்று நினைக்கிறோம். அகந்தையின் வெளிப்பாடு வரையறைக்குள் வைக்கும். அது பரிணாமத்திற்கு எதிரானது என்பதால் வாழ்வில் முன்னேற்றத்தைத் தடுக்கும். சிருஷ்டியில் அகந்தை involution -ன் பகுதி என்பதால் அது அஞ்ஞானத்தை வளர்க்கும். திடப்படுத்தும்.  வாழ்வில் அது எப்படி எதிரொலிக்கும் என்றால் நாம் இருக்கும் இடத்திலேயே இருப்பதாக நினைப்போம்.  ஆனால் மற்றவர்கள் அனைவரும் ஓடிக் கொண்டு இருக்கும் போது நாம் பின் தங்கி விட்டது நமக்குத் தெரியாது என்ற நிலையில் இருக்கும்.  காரணத்தை மனிதர்கள், சூழல், சமுதாயம், மேல் போடுவோம். நம்

வரையறை, நம் அஞ்ஞானம், நம் முன் முடிவுகள், நம் அபிப்ராயங்கள் தான் அதற்கு காரணம் என்று ஏற்றுக் கொள்ள மாட்டோம்.

இதை நடைமுறையில் கொண்டு வர வேண்டுமென்றால் குறைந்த பட்சம் ஒவ்வொன்றையும் evolution -ன் முதல் படியாக (comfort zone )-ஐ விட்டு வெளியே வருதல், இறைத்தன்மையின் oneness , unity -ன் முதல் படியாக, commonality -ஐ எடுத்துக் கொள்ளுதல் போன்றவற்றை அகந்தையின் பிரித்துப் பார்க்கும் தன்மையை வாழ்வில் முன்னேற்றத்திற்கு உதவும் வழியாகக் கூறுகிறார். இது அகந்தையை அழிக்கும் யோகம் என்பதால் அதற்காக நாம் செய்யும் அனைத்தும் பரிணாமம் என்பதால் - அவை வாழ்வில் முன்னேறம், வளம், அபரிமிதமாக வெளிப்படும்.

இதை வேலையில் பொருத்திப் பார்த்தால் - நாள் முழுவதும் மூட்டைக்கு இரண்டு ருபாய், பேரலுக்கு 10 ரூபாய் என்று மூட்டை தூக்குபவர்கள், பேரல் தூக்குபவர்கள் 400 அல்லது 500 சம்பாதித்து விதியை நொந்துக் கொண்டு இருப்பார்கள். அல்லது அன்று மாலையே tasmac சென்று அதுவே ஆனந்தமான வாழ்வு என்று கூறுபவர்களும் இருக்கிறார்கள். அந்த ஜடமான நிலையிலிருந்து, அதாவது அகந்தை விரும்பி ஏற்கும் அந்த ஜடமான நிலையில் இருந்து, வேலையை சற்று ஈடுபாட்டுடன் செய்யலாமா, மேம்படுத்தி செய்யலாமா, பொருள் நசுங்காமல், வீணாகாமல் செய்யலாமா, என்று சற்றே பொருள் நலம், பிறர் நலம் பிரித்து பார்க்கும் போது அவர்கள் வாழ்வு முறையும் முன்னேற்றம் பெறுவதை பார்க்கிறோம்.

சிரமம் பார்க்காமல் செய்வார்கள் , ego பார்க்காமல் செய்வார்கள் என்று நிறைய பேரை கேள்விப்பட்டு இருப்போம். அவர்கள் அடைந்த முன்னேற்றத்தை கவனித்தால், இதன் பொருள் புரியும்.

தினமும் factory வாசலில் warehouse வாசலில் load ஏற்றி இறக்கி மாதத்திற்கு 12,000 சம்பாதிப்பவர்கள் அதே factory -இல் கண்ணுக்கு எதிரில் physical நிலையில் packing செய்பவர்கள். குறைந்த பட்சம் 18,000 சம்பாதிப்பதை கண்ட பிறகும் அதை செய்ய வேண்டும் என்று நினைப்பதில்லை. அதற்கு ஒன்றும் பெரிய அறிவோ, உழைப்போ, படிப்போ தேவை இல்லை. இருக்கும் நிலை மாற வேண்டும் என்ற விருப்பம் மட்டுமே தேவை. அடுத்த கட்ட முன்னேற்றத்தை கூட பிரித்துப் பார்க்கத் தெரியாதவர் பலர். சமுதாயத்தில் பெரும்பாலானோர் செய்யும், அல்லது கேட்கும் கேள்விகளைக் கூட நம்மை நாமே கேட்டுக் கொள்வதில்லை. தவறு என்று தெரிந்தே தவறானவர்களுடன் தொடர்பில் இருப்போம். தலைமையின் கொள்கைக்கு மாறான

ஸ்தாபனத்தோடு துரோகம் செய்பவருக்கு உதவியாக இருப்போம்.  அதோடு நன்றியறிதல், விசுவாசம், போன்ற இறைத்தன்மைக்கான வார்த்தைகளைப் போட்டுக் கொள்வோம்.

ஒவ்வொரு கணமும் நாம் இருக்கும் அஞ்ஞானத்திலிருந்து வெளியே வருவது நம் பிரித்தறியும் மனதில் இருந்து வெளியே வருவது - அகந்தையில் இருந்து வெளியே வருவது.  வாழ்வில் முன்னேற்றத்தின் ரகசியம் அந்த பிரித்தறிதலிலேயே உள்ளது.  அதற்கு படிப்படியாக செல்ல வேண்டும்.  எந்த நிலையையும் விடக் கூடாது. உதாரணமாக, கடின உழைப்பு முதல் நீ அறிந்த அத்தனையும்  செய்து விடு exhaust yourself -லிலிருந்து non -initiative வரை செல்ல  10 நிலை இருந்தால் படிப்படியாகச் செல்ல வேண்டும்.  நேரடியாக non -initiative -க்கு சென்றால் அது மூட நம்பிக்கையாகவோ, சோம்பேறித்தனமாகவோ மாறி விடும்.  அந்த நிலைகளை பிரித்தறிவது அகந்தையை விட்டு வெளியே வருவது. அஞ்ஞானத்தை, வரையறையை, விட்டு வெளியே வருவது.  அது அறிவில்  விவேகம் பாகுபாடு என்று சேகரமாகி ஆன்மாவில் - உள்பார்வை, உள்ளுணர்வாக மாறும் வரை, அகந்தையை  அதற்கு சேவை செய்ய வைத்து பிரிவினையில் ஒற்றுமையைப் பார்ப்பது.

அதற்கு நம் முன் முடிவுகள், அபிப்ராயங்கள் ஆகியவற்றைத் தாண்டி நம் நோக்கம் நமக்குத் தெளிவாக இருக்க வேண்டும்.  அகந்தையின் வழிகளுக்கு, மனப்பான்மைகளுக்கு சக்தியில்லாமல் அந்த பேரார்வத்திற்கு சக்தி தர வேண்டும். அதற்கான முறை, வழி தெரிய வேண்டும். அதைச் செயல்படுத்தத் தேவையான திறமை, திறன், ஆற்றல் ஆகியவற்றை முழுமையாகத் தரத் தயாராக இருக்க வேண்டும்.  இவையெல்லாம் நம் அகந்தையின் பரிமாணங்களான comforts, prejudice , opinion , expectation ஆகியவற்றிலிருந்து வெளியே வந்தால் தான் முடியும்.

நாம் இன்றுள்ள நிலை நம் விருப்பு, வெறுப்பு, ஆகியவற்றிற்கு உட்பட்ட சமூகம், சூழல், திறமை ஆகியவற்றிக்கு உட்பட்ட நிலை என்பதை அமைதியாக சிந்தித்துப் பார்த்தால் புரியும்.  ஆசையிருக்கும், நம்பிக்கை இருக்காது. வசதிகளை விட்டுத்தர தயாராக இருக்க மாட்டோம்.  புது திறமை, திறனைப் பெற தயாராக இருக்க மாட்டோம்.  அன்னை அளித்த வாய்ப்பை ஒரு சேவை அன்பரான  Teacher எப்படியெல்லாம் வீணடித்தார்கள் என்பதை பல முறை உதாரணமாக கூறியிருக்கிறேன்.

நம்மைச்  சுற்றி higher resources அபரிமிதமாக இருந்தாலும், அவை நம்மை அழைத்தாலும், அதை நாம் கண்டுக் கொள்வதில்லை. சரியான அறிவுரை, வழிகாட்டுதல் சொல்பவரை நமக்குப் பிடிப்பதில்லை.  மனிதர்களின்  வெளி நடத்தையே நமக்கு முக்கியமாக இருக்கிறது. அனைத்தும் நம் விருப்பு, வெறுப்புகளுக்கு உட்பட்டே வர வேண்டும் என்று நினைக்கிறோம். தினம் தினம் 500 கோடி, 1000 கோடி , லட்சம் கோடி என்று காதுகளில் விழுந்தாலும், நம்மை சுற்றி அவ்வளவு பணம் இருக்கிறது, யாரோ இதையெல்லாம் சம்பாதித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள்  என்று தெரிந்தாலும், நாம் ஏன் இப்படி இருக்கிறோம் என்று பிரித்து அறியக் கூட விரும்பாத, அறிவதில் பயம் உள்ள, நம்மை பற்றி நாமே தெரிந்துக் கொள்ள விரும்பாத, அகந்தையே நம்மிடம் உள்ளது.  நம் உண்மை முகத்தை, நாம் காணும் தைரியம் கூட நமக்கு இல்லை.

கர்மயோகி அவர்கள் சொல்லும் நூறு கோடி நம் மனதைத் தொடுவதில்லை. அதற்காக அவர் கூறும் மனப்பான்மை, பண்புகள், செயல்கள் நம்மிடையே இருக்கிறதா, அல்லது வளர்க்க முடியுமா என்று பார்ப்பதில்லை.  மூட்டை தூக்குபவன் இன்னும் நாலு மூட்டை அதிகமாக தூக்கினால் , அதிகம் சம்பாதிக்கலாம் என்று நினைப்பது போலத் தான் , நாம் இருக்கும் நிலையிலிருந்தே ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்கிறோம்.  Factory வாசலில் மூட்டை தூக்குபவனுக்கு factory உள்ளே உள்ள வாய்ப்புகள் தெரிவதில்லை என்று இருப்பது போல , முட்டாள்தனமான அகந்தையின் உச்சத்தில் இருக்கிறோம்.  இதிலிருந்து என்ன தெரிய வருகிறது என்றால் நமக்கு முன்னேற்றத்திற்கான வழிகள் என்னவென்று தெரியும்.  ஆனால் செய்வதில்லை.  அறியாமையின் உச்சம் அது. வரையறையின் உச்சம் அது. அகந்தையின் உச்சம் அது. எனக்கு ஒரு கண் போனாலும் பரவாயில்லை என்பார்களே அது போன்றது இது. தெரிந்த விஷயத்தை சிறிய வேலைகளில் காட்ட முடியாதவனால், பெரிய வேலை செய்ய முடியாது. பெரிய வேலையை சரியாக செய்ய முடியுமானால், சிறிய வேலை சரியாக செய்யப் பட வேண்டும்.  வாழ்வு உயர வேண்டுமானால், அதற்கு ஏற்ப மனப்பான்மை, நடத்தை, பண்பு உயர வேண்டும்.  அதற்கு முதலில் நம்மிடம் உள்ள தாழ்ந்த விஷயங்கள் எது என்று தெரிய வேண்டும்.அதற்கு முதலில் நம் பிடிவாதம், சுயநலம், விருப்பு ஆகிய அகந்தையின் பிடிகளில் இருந்து வெளியே வர வேண்டும்.  அதற்கு முதல் படியாக commonality - இறைவனுக்கும், நமக்கும், அல்லது பிற மனிதனுக்கும் நமக்கும் உள்ள ஒரு commonality - பொதுத் தன்மையை எடுத்துக் கொள்வது அகந்தையிலிருந்து வெளியே வருவதற்கான ஒரு வழி என்று கூறுகிறார்.

பரிணாமத்தில் முன்னேற முதல் தேவை - அதற்கான aspiration - அதற்கான ஆர்வம் - அதோடு அதிகப்பட்ச energy - ஆற்றல் தேவை. அதை பெருமளவு சேகரிப்பது non -reaction . காரணம் நான் முன்பு சொன்னது போல வாழ்வு உங்கள் முன்னேற்றத்திற்கான அரணை அமைக்கும் போது , அது சில அவமதிப்பை, நீங்கள் மதிப்பு மிக்கதாக போற்றும் சிலவற்றை , உடமைகள் சிலவற்றை, பாதுகாக்கும் சிலவற்றை விட்டு வெளியே வர வைக்கிறது- During evolution life wants you to observe some humiliation, அதாவது comfort zone, prestige, status ஆகியவற்றில் இருந்து வெளியே வர வைக்கும். பெரும்பாலான கடவுள், தத்துவவாதி, விஞ்ஞானி , பகவான், அன்னை, கர்மயோகி என்று அனைவரது வாழ்விலும் இது நடந்து இருக்கிறது. ஒவ்வொரு வளர்ச்சிக்கும் பின்னும் ஒரு அவமானம் இருந்து இருக்கிறது., அகந்தைக்கு அடி விழுந்து இருந்திருக்கிறது. அது involution -க்கு துன்பத்திற்கு depression க்கு கொண்டு செல்லாமல் இருக்க வேண்டுமென்றால் non -reaction தேவை. அதுவே ஆன்மாவிற்கு energy -ஐ தரும். அகந்தை வெளிவராது. அப்படி இல்லையென்றால் அகந்தை வலுப்படும் - பொறாமையாக, பிடிவாதமாக , ஒத்துழையாமையாக, பழி வாங்கும் குணமாக வலுப்படும். அது மேலும் படு குழியில் தள்ளும்.. நம்மை தூண்டி விடும், கோபப்படுத்தும் ,இகழும். எதற்கும் நாம் reaction செய்யாமல் இருப்பது அகந்தைக்கு energy தராமல் இருப்பது. அதே போல எதிர்மறையான எண்ணங்கள், பிறருக்கு தீங்கு இழைக்கும் எண்ணங்கள், பொய்யின் உருவங்கள், உணர்வின் சந்தோஷங்கள் ஆகியவற்றை அடக்குவது அகந்தையை அடக்குவது. அது நிதானம், தனிவான குரல், போன்ற ஞானமாக நடைமுறையில் வெளிப்படுகிறது. அன்னை nostalgia - பழைய நினைவுகளைக் கூட cheap and childish mentality என்கிறார். நடந்ததை அசை போடுவது அதனால் வரும் எரிச்சல், அல்லது சந்தோஷம் அகந்தையின் விளையாட்டு என்கிறார். எளிமை என்ற பெயரில் சுட்ட அப்பளமும், ரசமும் போதும் என்று சொல்பவர் அகந்தையின் உச்சத்தில் இருப்பவர் என்று கர்மயோகி அவர்கள் ஒரு கட்டுரையில் சொல்லியிருப்பார்.

அடுத்த பொதுத் தன்மையாக எடுத்துக் கொள்வது, சுயநலமான நிலை குறைந்து குறைந்த பட்ச பரநலமாவது. செய்யும் ஒவ்வொரு செயலிலும் சுயநலத்தோடு குறைந்த பட்சம் ஒரு பரநலத்தையோ, அல்லது பொது நலத்தையோ கருத்தில் கொள்வது. பிறர் நிலை பார்வை பார்த்தல் இதன் ஒரு பகுதி. இந்த சட்டத்தை உதாரணமாகக் கொண்டு token act செய்த போது சிங்கப்பூரிலிருந்து வந்த ஒரு labour team பத்து வருடமாக இன்று வரை என்னோடு இருக்கும் உதாரணத்தை சில முறை கூடல்களில் கூறியிருக்கிறேன்.

மூன்றாவது பொறுப்பை ஏற்றுக் கொள்ளுதல். Taking Responsibility. பிறர் தவறு என்று நாம் நினைக்கும் விஷயங்களில் உள்ள inner -outer correspondence, life responses ஆகியவற்றைப் பார்த்தல், பிடியை விடுதல், போன்றவை இதன் வடிவங்கள். அகந்தையிலிருந்து வெளியே வரும் பரிமாணங்கள். இதற்கு மூல காரணமான நம் செயல்கள், மனப்பான்மைகள், ஆகியவற்றை ஆராய்ந்து யார் தவறு செய்து இருந்தாலும் அதற்கு காரணம், மூலம், நானே என்று ஏற்றுக் கொள்ளுதல், தன் மீது உள்ள குற்றத்தை மறைக்க முயற்சி செய்யாமல் இருப்பது, அதற்கு பிறரை காரணமாக்குவது போன்றவற்றில் ஈடுபடாமல் இருப்பது. இதற்கான உதாரணமாக, stadium வேலை உதாரணம், போட்டியாளரிடம் வியாபார நுணுக்கத்தை formula -வை பகிர்ந்து கொண்டது ஆகியவற்றை சில கூடல்களில் கூறியிருக்கிறேன்.

இன்னொரு உதாரணம் கூறுகிறேன். A என்பவர் எனக்கு பணம் தர வேண்டும். வெகு நாட்களாகத் தரவில்லை. B என்பவர் A க்கு பணம் தர வேண்டும். B எனக்கு நண்பர். என்னிடம் கொடுத்துவிட்டு A வின் கணக்கில் கழித்துக் கொள் என்றால் செய்யக் கூடியவர். அது A வுக்கும் தெரியும். என்றாலும் பிடியை விடுதல் என்ற சட்டத்தின் படி B -யிடம் நீங்கள் A -வுக்கு பணம் தருவதானால் தாருங்கள், எனக்காக நிறுத்த வேண்டாமென்று கூறினேன். அவரும் A -க்கு தந்து விட்டார். மறு நாள் A என்னிடம் வந்தார். உங்களின் பரந்த மனதிற்கு நன்றி என்று கூறி என்னால் முழுவதும் தர முடியவில்லை. தந்தால் மேற்கொண்டு நான் தொழில் செய்ய முடியாது. அதனால் பகுதியாகத் தருகிறேன் என்று கூறினார். மேலும் இப்போதுள்ள நிலையில் எனக்கு இந்த order -ஐ செய்ய முடியாது நீங்கள் செய்யுங்கள் என்று கூறி ஒரு contract -ஐ Back to Back கொடுத்தார். அதில் அவர் தர வேண்டியதை விட அதிகமாகவே லாபம் வந்தது. அவர் தர வேண்டியதை சிறிது சிறிதாகத் தந்து விட்டார்.

அகந்தையிலிருந்து வெளியே வரும் முயற்சிகளுக்கு வாழ்வு தரும் பரிசுகள் அத்தகையது. இதை செய்யும் போது மனப்பான்மையில், வாழ்வில் முன்னேற்றம் வருவதைக் காணலாம். அதிர்ஷ்டம் உள்ளே வருவதைக் காணலாம். சூழல் உயர்வதை, வாய்ப்புகள் உருவாகுவதைக் காணலாம். இது வரை நகராத விஷயம் நகர ஆரம்பிக்கும். மாறாத மனிதர்கள் மாற ஆரம்பிப்பார்கள். தடையாக உள்ளவர்கள் விலகுவார்கள். முன்னேற்றத்தை தரும் அத்தனை விஷயங்களும் தானே வரும். அப்படி வரும் போது அதை அகந்தையின் பார்வையில் பிரித்துப் பார்க்காமல், ஆன்மாவின் பார்வையில் பார்த்து ஞானத்தை, விவேகத்தை அடிப்படையாக வைத்து வாழ்வில் முன்னேற வேண்டும். இதன் தொடர்ச்சியை அடுத்தக் கூடலில் பார்க்கலாம்.